ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

பரமேசுவரன் பிரஸாதம் செய்யாவிடில் பிராணிகள் பலனையடைய முடியாது. பகவானுடைய பிரஸாதமும் பக்தியொன்றைத்தவிர வேறெவ்வித ஸாதனத்தாலுமுண்டாகாது. அப்படியானால் மற்ற ஸாதனங்கள் வீண்தானேயென்று நினைக்கக்கூடாது. பகவத்பக்தி உண்டாவதற்கு மற்றவை காரணமாவதாலாமென்க. நிர்மல மனஸ்ஸுள்ளவர்களுக்குத் தான் பக்தி திடமாயுண்டாகும். மனது நிர்மலப்படவேண்டுமானால் பரமேசுவரனது ஆக்ஞா விஹிதங்களான வைதிகமான வர்ணாசிரம தர்மங்கள்தான் இன்றியமையாத ஸாதனங்கள். இது யுக்திக்குமொத்ததே. ஒரு பிரபுவின் தயவு வேண்டுமானால் முதலில் பலகாலம் அவனிட்ட வேலைகளையெல்லாம் தவறாமல் ஒழுங்காகச்செய்துவந்தால் பிரபுவின் ஆக்ஞைக்காகச்செய்யவேண்டியதாக நினைத்த வேலைகளைத் தானாகவே பிரியப்பட்டு செய்யும்படி தீர்மானித்து களங்கமற்றுச் செய்துவருவான். சுயமாகவே பிரியப்பட்டு பிரபுவின் வேலையைச்செய்துகொண்டுவரும் வேலைக்காரனிடம் அந்தப் பிரபுவுக்கு தயவு உண்டாகாமலிராது. வேலைக்காரன் பிரபுவினிடம் பிரியப்படுவதே பக்தியென்பதாகும். பிரபு வேலைக்காரனிடம் தயைசெய்வதே அவன்செய்த பிரஸாதமென்பதாகும். இந்த நியாயம் போலவே ஜகத்பிரபுவானபரமேசுவரனிட்டகட்டளையைக்களங்கமின்றி ஆதரவுடன் அனுஷ்டித்துவந்தால் பரமேசுவரனிடம்நிரதிசயமான பிரீதி பாராட்டியதாகும். அதுதான் பக்தியெனப்படும். அப்படி பக்தி செய்தவனிடம் பரமேசுவரனும் பிரஸாதம் செய்வார். அந்த பக்தியும் பரமேசுவரனைத் தன்னைவிட வேறுபட்டவனாக நினைத்தும் செய்யப்படலாம். தானாகவே நினைத்தும் செய்யப்படலாம். வேறுபட்டவனாக நினைக்கும்பொழுது பிரபுபிருத்திய நியாயமாக பக்தன் தன்னைப் பரமேசுவரனைச்சேர்ந்தவனாகநினைப்பான். அப்பொழுது ஒன்பதுவிதமான பக்திகளுள் சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம் ஆகிய ஏழுவிதமான பக்திகள் செய்யப்படுவனவாகும். பிரபு பிருத்திய நியாயமாகப் பாராமல் மித்திரபாவனையாகப் பார்க்கும்பொழுது பக்தன் பரமேசுவரனைத் தன்னைச் சேர்ந்தவனாக நினைப்பான். அப்பொழுது அது ஸக்கியமென்ற எட்டாவது பக்தியாகும். அதிலிருந்து ஈசுவரனே நான் என்று பக்தன் பரமேசுவரனை அபேதமாக நினைப்பான். அதுதான் ஒன்பதாவது ஆத்மநிவேதனமென்ற சிறந்த பக்தியாகும். பிரபு பிருத்திய நியாயமான பக்தியில் கோபிகைகளும், மித்திரபாவனையுள்ள பக்தியில் குசேலர் முதலியவர்களும், அபேத பக்தியில் உத்தவர் முதலியவர்களும் உதாரணமாவார்கள். அவ்விதமாகப் பரமேசுவரனிடம் ஏதாவது ஒரு பக்திமார்க்கத்தை அவலம்பித்துப் பரமேசுவரனுடைய பிரீதியை சம்பாதிக்கவேண்டும். அப்படியானால் பரமேசுவரன் பிரஸாதம்செய்வார். இஷ்டப்பட்ட பலன்களையெல்லாம் அடையலாம். யாவரும் அப்படியே செய்வார்களாக; சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-௵ கார்த்திகை௴ ௪௨

பக்திசெய்யப் பிறரைத் த்வேஷிக்கவேண்டுமா?

பரமேசுவரனைப் பெரியவராகவும், பிரஸாதம் செய்பவராகவும் நினைப்பவன், எல்லோரும் பரமேசுவரனுக்குக் கீழ்ப்பட்டவர்களென்றும், அவரவர்களின் தன்மைக்குத் தக்கவாறு அவரிட்ட வேலைகளைச் செய்யக்கடமைப்பட்டவர்களென்றும் நம்பி அவரவர் எல்லையை மீறிநடக்காமல் அவரவர் வேலையைச்செய்து அன்யோன்யம் ஸ்னேஹபாவத்துடனிருந்து இஹபர சிரேயஸ்ஸையடையவேண்டுமேயன்றி ஒருவரை யொருவர் த்வேஷிப்பதும் தூஷிப்பதும், எல்லை மீறிநடப்பதும் கூடாது. ஒரு ராஜாங்கத்திலிருப்பவர்கள் எல்லோரும் அவ்வரசனது பிரஜைகளென்றும், அவரவர்களின் திறமைக்குத் தக்கவாறு அரசனுலிடப்பட்ட வேலைகளைச்செய்யக் கடமைப்பட்டவர்களென்றும், நினைப்பது தானே நியாயமாகும். அப்படி நினைத்து அவரவர் வேலையை அவரவரும் செய்து ஒற்றுமைப்பட்டு வாழவேண்டியதல்லவா அவர்களுக்குரித்தானதாகும். அவருக்குள்ள உரிமை நமக்கில்லையா? வென்று வாசற்காப்பானாய் நியமிக்கப்பட்டவன் மந்திரிஸ்தானத்திலிருக்க விரும்புவது சரியாகுமா? இப்படியேயெல்லோரும் பெரியவேலையிலேயே பிரவேசிக்கக் கருதினால் கீழ்ப்பட்டவேலை எப்படி நடக்கும். அன்றியும் எல்லோருமுயர்ந்த பதவியிலேயே நோக்கங்கொண்டு முன் உயர்ந்தபதவியிலமர்த்தப்பட்டவர் சுயநலம் பாராட்டி மற்றவரைக் கெடுத்துவிட்டதாக நினைத்து அவரிடம் த்வேஷப்பட்டு தூஷிக்கவும் தலைப்பட்டால் இதைக்கண்ட அரசன் ஆனந்தப்படுவானா? அடக்கி ஆண்டு அவரவர் வேலையைச் செய்ய ஆக்ஞை செய்வானா? என்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஆலோசிக்குமிடத்து, அவரவருக் கிட்டவேலையை அவரவர் செய்யாமல் வீண் சச்சரவு செய்து ஸத்தியாக்ரஹம் செய்வார்களானால் அரசன் கடுஞ்சினங் கொள்வானென்பது புத்திமானுக்குப் புலப்படாமலிருக்காது,

அதுபோல் எல்லோரையுமிரக்ஷிக்க இரக்கங்கொண்டு அதற்காகவுள்ள உபாயங்களைத் தீர்க்காலோசனை செய்து வேதவாயிலாக விதித்த பரமேசுவரன் அந்தந்த அதிகாரிக்குத் தக்கவாறு அனேக ஸாதனங்களை ஆசார்ய ரூபமாயிருந்து போதித்திருக்கிறார். அப்படியிருக்கையில் ஒருவரை யொருவர் துவேஷிக்கவேண்டுமா? அதிலும் பக்திசெய்யப் பிறரைத் துவேஷிக்கவேண்டுமா? பக்தியென்றதை ஒரு ஸாதனமாயெண்ணியவர் பரமேசுவரனை ஒப்புக்கொள்ளாமலும், அவராக்ஞைக்குக் கட்டுப்படாமல் மீறி நடக்கக்கூடாதென்பதை அங்கீகரிக்காமலு மிருக்கமாட்டார். அப்படியிருக்கையில் அவர் ஆக்ஞாபித்த வழியிலேயேயிருந்து பக்தி செய்வதுதானே உசிதமாகும். பிறருக்குள்ள உரிமை நமக்கில்லையாயென்று வீணாக அகம்பாவப்பட்டு அவரவரும் தன் எல்லையை மீறி நடப்பதனால் பரமேசுவரன் பிரியப்படுவாரா? அனுக்கிரஹந்தான் செய்வாரா? அன்யோன்யம் பிராணிகள் ஒற்றுமையில்லாமல் திண்டாடட்டுமென்று பலஸாதனங்களைப் போதித்தார். ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருந்து ஆகவேண்டிய கார்யங்களை ஒழுங்காகச் செய்தால் பரமேசுவரனும் தன்னாக்ஞைப்படி நடந்தார்களேயென்று பிரியப்பட்டு மேன்மேலும் உயர்ந்த பதவி கிடைக்கும்படி பிரஸாதம் செய்வார். ஒரே பிறவியிலேயே எல்லா உரிமைகளையுமொருவன் அடையமுடியுமா? ஒருநாளும் முடியாது. ஆனால் பல பிறவிகளில் பிரயாஸப்பட்டுத்தான் மேல்பதவியை அடையவேண்டும். உரிமையிருந்தாலும் உத்திரவில்லாமல் செய்யக்கூடாதல்லவா? பக்திசெய்ய எல்லோருக்கு முரிமையுண்டு. ஆனால் அவரவர் வேலையிருந்தே அதைச் செய்ய வேண்டும். அவரவர் நிற்கவேண்டிய இடத்திற்றான் நிற்க வேண்டும். வெளிப்பாராக்காரன் உள்பாராக்கார ஸ்தானத்திற்கு உத்திரவில்லாமல் வந்துவிடலாமா? இதற்காக ஸத்தியாக்கிரஹம் செய்வது சரியாகுமா? அதனால் எல்லோருமொரே பரமேசுவரனுடைய பக்தர்களாயிருந்து பிரஸாதம் பெறவேண்டுமானால் பிறருடைய துவேஷமும் தூஷணையுமில்லாமல் நம்முடைய யோக்யதை இவ்வளவுதானென்று நிச்சயித்து தனக்குரிய அதிகாரப்படி விதிக்கப்பட்டுள்ள தர்மங்களை அனுஷ்டித்து யாவரும் க்ஷேமத்தையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்

மேல் நாட்டாரைப் பின்பற்றுபவர்களுடைய

விபரீதங்கள்.

நம் இந்தியா தெய்வவசத்தால் ஆங்கில அரசாக்ஷியிலிருந்து வருகிறது. இவ்விந்தியப் பிரஜைகளின் க்ஷேமத்தைக்கோருவது அரசர்களின்கடமை என எண்ணி ஆங்கிலேயர்கள் நமக்குக்கல்வி கற்பிக்கத் தலைப்பட்டார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குமுன், கல்வியானது தேசஜனங்களின் அபிப்பிராயங்களையொட்டியே இருந்துவந்தது. ராஜீய பாஷைகளைக்கற்று பண்டிதர்களாயிருந்தால் அதை அப்பியசித்தவர்கள் ராஜஸம்மானம் பெறுவது வழக்கமானதால், அப்படியே அநேகர் பாஷைகளைக்கற்று வெகுமானமும் பெற்றனர்.

தேசத்தின் முன்னேற்றத்திற்கு வாணிபம், சிற்பம், பயிர்த்தொழில் முதலியன அவசியம். இத்தொழில்கள் அதற்கு ஏற்பட்ட ஜாதியார்களாலேயே கவனிக்கப்பட்டுவருகின்றன. ஒருவருடைய தொழிலை மற்றொரு சாரார் பின்பற்றுவது குறைவு எனவும் தத்தம் ஜாதிக்குரிய தொழிலைச் செய்து ஜீவிப்பதே கௌரவமென்பதும் ஜனங்கள் மனதில் அழுத்தமாய்ப் பதிந்திருந்தபடியால் ஜீவனவிஷயத்தில்யாவரும் ஒற்றுமையுடனிருந்துவந்தார்கள்.

உதாரணமாக ஓர் வீட்டில் விவாஹகாலத்தில் வேதங்கற்றுணர்ந்த புரோகிதன், கலியாணத்திற்கு வேண்டிய மண்பாத்திரங்களைச் செய்துகொடுக்கும் குயவன், திருமங்கிலியம் செய்துகொடுக்கிற தட்டான் இன்னும் அநேக ஜாதியர்களும் ஒழுங்காய் அவரவர்கள் வேலைகளைச் செய்து சந்தோஷமாய் அவர்களுக்குச் சேரவேண்டிய சம்மானங்களைப் பெறும் வழக்கங்கள் இப்போதுமிருப்பதை நாம் கண்ணுல் காண்கிறோம்.

ஒவ்வொருவரும் அவரவர்களுடைய குலதர்மத்தை விடாது கௌரவமாகவே எண்ணி முறையே அனுஷ்டித்துவருகிறார்கள்.

ஆரம்பத்திலேயே குல ஆசாரங்களையறிந்த ஒருவன் ராஜீய பாஷைகளைக் கற்று ராஜாங்கங்களில் பிரவேசித்து உதவி புரிந்து பணம் சம்பாதித்தபோதிலும் தன் மதப்பற்றையாவது கொள்கைகளில் எதையாவது விடுகிறதில்லை.

மேல்நாட்டாரைப் பின்பற்றுபவர்களுடைய விபரீதங்கள்

ஆதியில் இந்தியர்களுக்கு எப்படிக் கல்விகற்பிப்பது என்ற பிரச்னை வந்தபொழுது ஆங்கிலேயர்களில் புத்திமானும் நீதிமானுமுள்ள ஸர். வில்லியம் ஜோன்ஸ் என்பவர் இந்தியர்களுக்கு அவர்கள் முறைப்படியே கல்வி கற்பித்தல் இந்திய முன்னேற்றத்திற்கு அனுகூலமென அபிப்பிராயப் பட்டார் ஆனால் ஆங்கிலரான மேகாலேயும் இந்தியரான ராம்மோகனராயும் ஆங்கில வழிகளில் இந்தியர்களுக்குக் கல்வி போதித்தல் நன்மையெனச் சொன்னார்கள். கடைசியாக இவ்விருவர் சேர்ந்து கூறிய வழிகளே நிறைவேறிச் சற்றேறத்தாழ இப்பொழுதும் அம்முறைகள் அனுபவத்திலிருந்து வருகின்றன. எந்த எண்ணத்தை மேற்கொண்டு மேகாலே ஆங்கில போதனமுறைகளே இந்தியர்களுக்கு ஏற்றவையென யூகித்து அவைகளைப் பிரேரேபித்தாரோ அம்முறைகள் இந்தியர்களுக்கு எவ்வளவு சாதகமாயின என்பதைப் பிறகு ஒரு சமயத்தில் விசாரித்தறிந்து பின் வருமாறு தெரிவித்திருக்கிறார்.

அதாவது ஆங்கில பாஷையைக்கற்ற எந்தஹிந்துவும் தன் மதத்தில் உண்மையான பற்றுடனில்லை. சிலர் வெளித்தோற்றத்தில் மதத்தில் பற்றுள்ளவர்களாகக் காட்டிக் கொள்ளுகிறார்கள். சிலர் மதப்பற்றை அறவே விட்டொழித்தவர்களாக விருக்கிறார்கள். மற்றும் சிலர் கிருஸ்துமதத்தில் சேர்ந்து விடுகிறார்கள். முக்கியமாக நம் கோரிக்கை என்னவென்றால் நமக்கும் நாம் ஆளும் கோடிக்கணக்கான ஜனங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை தெளிவுடன் எடுத்துக்காட்ட பிறப்பிலும் நிறத்திலும் இந்தியனும் வழக்க பழக்கங்கள், மனப்பான்மை, நடவடிக்கை, புத்தி நுட்பம் இவைகளில் ஆங்கிலேயனும் உள்ள ஒரு வகுப்பார் உண்டாகவேண்டுமென்பதே.

இம்மாதிரி மேகாலே தன் கருத்துகள் நிறைவேறியதற்குச் சந்தோஷத்துடன் அவர் தன் முறையை அனுஷ்டித்ததின்பயனைச் சிலாகித்துக் கூறியிருக்கிறார். ஆங்கில பாஷையை இந்தியர்களுக்குக் கொடுத்ததில் நன்மையே ஏற்படவில்லை என்று சொல்லவழியில்லை. அதின் மூலமாகத்தான் ஆங்கிலபாஷையைக் கற்றுணர்ந்த பல பிரமுகர்கள் கிளம்பி, இந்தியன் நாஷனல் காங்கிரஸ் என்பதை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதில் ஹிந்துக்

கள், கிருஸ்துவர்கள், முகமதியர்கள், பார்ஸி முதலிய பலவித ஜாதியார்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அக்காங்கிரஸ் சபையில் நம் பாரத தேசத்தவர்களுக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணவேண்டிய நோக்கத்துடன் தேசீய விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள். காங்கிரஸை ஸ்தாபித்தகாலத்தில் இச் சபையில் ராஜீய விஷயங்களைப்பற்றியே யல்லாது மதச்சமூக விஷயங்களைப்பற்றி இச்சபையில் பிரஸ்தாபிக்கக்கூடாது என்று மிகப்பெரியவர்களான, தாதாபாய் நௌரோஜி, லோகமான்ய திலகர், தயாம்ஜீ முதலியோர்கள் நிபந்தனை ஏற்படுத்தி அதே மாதிரி சபையை வெகுகாலம் நடத்திவந்திருக்கிறார்கள். ஏனெனில் ஹிந்துமதமானது வெகு காலங்களுக்கு முன்னாலேயே முன் ஜாக்கிரதையுடன் வேரூன்றப்பட்டு தன் இயற்கைக் கோட்பாடு களுடன் விளங்கிவந்திருக்கிறது. அன்னியமதத்தைச் சேர்ந் தவரும், அன்னியதேசத்தில் பிறந்தவரும், நடுநிலைமையுள்ளவரு மான, எட்மண்ட்பர்க், பின்காட் முதலியவர்கள் இந்திய மத சமூகவிஷயங்களைப்பற்றிப்பெரிதும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்.

எட்மண்ட்பர்க் பிரபுக்கள் சபைக்கு முன் கூறியதாவது. இந்தியஜாதிக் கோட்பாடுகள், முகம்மதியர் போர்த்து கீஸ் முதலியோர்களின் மதத் துவேஷத்திற்கும் அரேபியர்களுடைய கொடுங் கோன்மைக்கும் படிப்படியாக ஏற்பட்ட அன்னியதேச ஆட்சிகளுக்கும் தப்பியதுடன் ஆங்கிலேயர்களின் ராஜ்யஸ் தாபனப் பேராசையால் அநேக சச்சரவுகளிலும் அழியா மேன்மைப்பதவியில் இருந்து வருகின்றன. அவர்களுடைய மதமும் கொள்கைகளும் இடையிடையே வலிமை குன்றியிருப் பது இயல்பாயினும் எவ்வளவு அசைக்கமுடியாத நிலையில் இருந் திருக்கவேண்டுமென்பதை எளிதில் யாவரும் அறியலாம். தேச மானது பலவிதக் கஷ்டங்களுக்குள்ளாகியும் மதமானது ஒரே நிலைமையிலிருந்து வந்திருக்கிறது. நாம் நம்மனதிற்குத் தோன்றிய வாறு இந்தியர்களைப்பற்றி சிற்சில அற்ப அபிப்பிராயங்கள் கொள்ளாமலிருக்க இது ஒன்றே போதிய சான்றாகும். அவர் கள் தன்மையும் மதவிஷயங்களும் அபாரமானவைகளே யாகும்—பர்க்

மேல்நாட்டாரைப் பின்பற்றுபவர்களுடைய விபரீதங்கள்

புத்திசாலிகளான கோடிக்கணக்கான பிரஜைகள் எப்பொழுது சில பழக்கவழக்கங்களை அநேக ஆயிரவருஷங்களாகக் கையாண்டு வருகின்றார்களோ அதினின்றே அவர்கள் வழிகள் எல்லாம் முட்டாள்தனம் என்றது வீண் பேச்சாகும். ஹிந்துக்களின் சமூக விஷயங்களும், மதசம்பந்தமான விஷயங்களும் முதிர்ச்சியான அனுபவத்தை யொட்டியவைகளே யாகும்—பின்காட். இந்திய மதசம்பந்த விஷயங்களைப்பற்றி பரிபூர்ணமாய் இருந்து வருகிற மேல்நாட்டு நிபுணர்களின் அபிப்பிராயங்கள் ஒருபுறமிருக்க, மெகாலேயின் வழியில் தயாரான இந்திய மஹான்கள் கொள்ளும் அபிப்பிராயங்கள் மிக வேடிக்கையாக விருக்கின்றன. நாங்கள் புராதன ஒழுக்கங்களை எதிர்த்துச் சண்டை போடுவோம். புராதனவழிகள் நம் புத்திக்கு சரிப்பட்டுவரவில்லை. அதிகாரவர்க்கத்தினர்கள் தான் இவ்விஷயங்களை தைர்யத்துடன் சட்டமூலமாக சீர்திருத்தவேண்டும். ஜனங்களில் பெரும்பாலார் பழைய கட்டுப்பெட்டிகளாக இருக்கும் வரையில் பிரஜைகளுக்கு அனுகூலமான அரசாங்கம் ஏற்பட நியாயமில்லை என்று சப்ரூ கூறியிருக்கிறார். காங்கிரஸ் மேடையில் ஏறிப் பேசுகிற அநேக சீர்திருத்தக் காரர்களின் மனப்போக்கும் இம்மாதிரியாகவே இருக்கின்றது. இம்மாதிரி ஜனங்களின் அனுபோகம் வாய்ந்த பழைய வழிகளை ஏளனம் செய்வதும் கைவிடுவதும் தெரியாத்தனமேயாகும். 11—9—31 லீடர் பத்திரிகையில் முன்ஷீ ஈச்வரசரணஜோஷி என்பவர் சமீபகாலத்தில் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றிருந்த ஒருவரைப்பார்த்து பிரிட்டிஷ் மந்திரிகளில் ஒருவர் பின்வருமாறு சொல்லியதாக எழுதியிருக்கிறார். இது நன்கு வாசித்தறியவேண்டிய முக்கிய விஷயமாகும்.

"ஏ ஆத்மாக்களே, நீங்கள் தேசியவாதிகள் என்று சொல்லிக் கொள்ளுகிறீர்களே. நீங்கள் எங்களைப்போல் உடுத்து எங்களைப் போல் உண்டு, எங்கள் பாஷைகளையே பேசுகிறீர்கள். உங்கள் வீடுகளும் எங்கள் வீடுகள்போல இருக்கின்றன. நீங்கள் இந்திய கைத்தொழிலைப்பற்றி சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறதில்லை. உங்கள் மனப்பாங்கும் இந்திய வழியிலில்லை."

இப்படியெல்லாம் நாம் பெயர்வாங்கினால் நம் தாய்நாடாகிய இந்தியா இந்தியாவாக இருக்கவே முடியாது. கூடிய சீக்கிரத்தில்

அன்னியதேசங்களைப் பின்பற்றுவதால் நம் வழக்க ஒழுக்கங்கள் நாசமடைந்துவிடு மென்பதில் ஐயமில்லை. ஆதலால் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளவேண்டிய தவசியமாகும்.

K. மார்க்கண்டேய சர்மா,
எடிடர் ஸ்வதர்மப்பிரகாசினீ
கில்பாக், மதருஸ்

விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் விசேஷ மஹிமை.

பக்தியின்பெருமை.

உலகத்தில் ஈச்வரனையடைய இரண்டு மார்க்கங்களுண்டு. அவை ஞானமார்க்கம். பக்திமார்க்கமெனப்படும். தேஹக்லேசம் செய்து, மனதையடக்கி, யோகமுறையால் ஞானம்பெற்று ஈசனையடையலாம். ஆனால் பக்திமார்க்கம் மிகமிகச் சுலபமானது. கலியில் அதுதான் விசேஷமாகச்சொல்லப்படுகிறது. பக்தியைப் பற்றின நந்தன், கண்ணப்பன் முதலிய பெரியோருடைய சரிதங்களைக் கேட்டிருப்பீர்கள். சென்ற நூற்றாண்டில் ப்ரத்யக்ஷமாக நடந்த இக்கதையைக்கேட்க பக்தியின் பெருமை விசேஷமாக விளங்கும்.

வட ஆர்க்காடு ஜில்லாவில் ஓர் ப்ராஹ்மணரிருந்தார். அவர் பெயர் யக்ஞசர்மா. அவர் இளமையிலேயே காசிக்ஷேத்ரமடைந்து ஒரு குருவையணுகி வேதவேதாங்கங்களையும் தர்மசாஸ்திரங்களையும் கற்றுவந்தார். வித்தையில் உள்ள ஊக்கத்தால் முப்பது வயதாகியும் விவாஹத்தைப்பற்றி நினைத்தாரில்லை. ஆனால் அவர் தாயார்மட்டும் அவரை விவாஹம்செய்துகொள்ளும்படி பன்முறை வற்புறுத்தினாள். ஏனெனில் ஸந்ததியில்லாவிட்டால் பித்ருக்களுக்கு நரகவாஸம் ஏற்படுமென தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. அவ்வேதியர்மட்டும் அதற்கிணங்கவில்லை. ப்ரஹ்மசர்யத்திலேயே தன்னுயுள் முழுமையும் கழிக்கவேண்டுமென அவரெண்ணம். க்ருஹஸ்தாச்ரமத்தில் பலவிதகுணங்களிருப்பினும் அது முடிவில் துக்கத்தையுண்டுபண்ணி உலகமாயையில் தன்னை அழுத்திவிடுமென அவர் கருதினர்.

இஃதிவ்வாறுயிருக்க அவர் கருத்தையுணர்ந்த அவர் தாயார் ஒரு யுக்திசெய்தாள், அவருடைய குருவுக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டாள். "ஐயனே! எனக்கிருப்பது ஒரே பிள்ளை. அவர் உங்களுடைய சீடர் யக்ஞசர்மா. பலமுறை வேண்டியும் க்ருஹஸ்தாச்ரமத்தை மறுக்கிறார். ஸந்ததி நசித்துவிடும்போலிருக்கிறது, தாங்கள் தயையுற்று அவரை எங்ஙனமாவது மணந்து கொள்ளும்படி செய்யவேண்டும். வம்சம் நசிக்காமலிருக்கும்படி அனுக்கிரஹம்புரிதல் வேண்டும்" என ஒரு கடிதம் எழுதினாள்.

இக்கடிதத்தைக்காண அம்மஹானுடைய உள்ளம் பரிதபித்தது. உடனே தன் சிஷ்யனைக்கூப்பிட்டு "யக்ஞேச்வரா! உன்னுடைய ப்ரஹ்மசர்யத்தையும், பக்தியையும் மெச்சினேன். என்னுடைய அனுக்ரஹத்தால் உனக்கு மிகுதியுள்ள எல்லா சாஸ்திரங்களும் ஸ்புரிக்கும். இனி குருகுலவாஸம்வேண்டாம். மற்றெல்லா ஆச்ரமங்களுக்கும் உபகாரமாயிருக்கும் க்ருஹஸ்தாச்ரமத்தைப் பெற்று ஸத்ஸந்ததியைப் பெறுவாய். இது என் ஆசிர்வாதமும் ஆக்ஞையும் ஆகும்" என்றார்.

குருவே ப்ரத்யக்ஷதைவம். இவ்வுலகில் வேறெந்த அபராதத்திற்கும் ப்ராயச்சித்தமுண்டு. குருவின் இஷ்டத்திற்கு விரோதமாக நடப்பவனுக்கு ப்ராயச்சித்தமுமில்லை. ஈசனுடைய அருளுமில்லை. எனவே அப்பிராஹ்மணோத்தமர், எக்கஷ்டம் வந்தாலும் வரட்டும், அவர் உத்திரவுபடி நான் செய்துதான் தீரவேண்டுமென தீர்மானித்தார். அவர் ஆக்ஞையை சிரஸாவஹித்து ஸ்வதேசம் திரும்பினான்.

முற்காலத்தில் க்ஷுத்ரதைவ உபாஸகர்சிலர் இஷ்டதைவத்தின் ப்ரீதிக்காக நரபலி இடுவது வழக்கம். அவ்வினத்தைச் சார்ந்தவர் பூரி, ஜகன்னாத் க்ஷேத்ரங்களுக்கு அருகாமையில் வஸித்து வந்தார்கள். நம் யக்ஞசர்மா க்ஷேத்ராடனம் செய்துகொண்டு ஆங்காங்குள்ள புண்ணியமூர்த்திகளை தர்சனம்செய்து பரமானந்தத்துடன் ஊருக்குத்திரும்புகையில் ஜகந்நாதஸ்வாமி தர்சனத்திற்காக அவ்வூர் வந்துசேர்ந்தார்.

பூசாரியின் சிஷ்யர்கள் நரபலிக்காகச் சரியானமனிதனைத் தேடிக்கொண்டுவர ஜகந்நாதத்தில் நம்யக்ஞசர்மாவைக்கண்டனர். அஸ்கலித ப்ரஹ்மசாரியான யக்ஞசர்மாவின்தேஹம் தங்கமேனி

கொண்டு பார்ப்பவர் கண்ணைப் பறிக்கத்தக்கதாயிருந்தது. ஓரங்கமும் ஹீனமில்லாமல் பருத்து பளபளவென இருக்கும் யக்ஞசர்மாவின் தேஹத்தை தங்கள் தைவமான காளிக்குமிக உயர்ந்த சரியான பலி எனக்கருதி மிகஸந்தோஷமடைந்தனர்.

“ப்ராஹ்மணோத்தமரே! உங்களைக்கண்டதும் எங்கள் மனம் பரவசமாயிற்று. கர்மானுஷ்டானங்கள் தவறாதுசெய்யும் தங்களைப்போலுற்ற பெரியோருக்கு எங்கள் யஜமானன் விசேஷமான பரிசளிப்பான், எங்களைப் பின்பற்றி வருவீராயின் தங்களுக்கு விலையுயர்ந்த பட்டாடைகளுடன் விசேஷதனத்தையும் பெறலாம்” என்று நம் யக்ஞசர்மாவினிடமணுகி மிக வணக்கமாகக் கூறினார்கள்.

பொருளாசையைவெல்ல எவரால் முடியும்? கல்யாணத்திற்கு சஹாயமாக இருக்கும் என்றெண்ணினான். எனவே யக்ஞசர்மா அவர்களுடைய வலையில் பலமாக சிக்கிக்கொண்டார்.

உடனே அச்சிஷ்யர்கள் இவரை ஓர் குதிரைவண்டியில் ஏற்றிக்கொண்டு விரைவாக ஊர்போய்ச் சேர்ந்தார்கள். அவர்களுடைய குருவான பெரிய பூசாரியிடம் சென்று “நம் காளிக்கு இன்று நல்லதிர்ஷ்டம், நம்மிடம் மிகப்ரீதியுண்டாகும், சரியான ஆசாமியை கொண்டுவந்திருக்கிறோம்” என்று குதூஹலத்துடன் சொன்னார்கள்.

அப்பூசாரியும் அவ்வேதியரைக்கண்டு அதிக ஆனந்தமடைந்தான். அவருக்கு விலையுயர்ந்த பட்டாடைகளும் அதிகமான த்ரவ்யங்களைக்கொடுத்து அவரை சந்தோஷப்படுத்தினான், யக்ஞசர்மா இவைகளை எடுத்துக்கொண்டு தான் புறப்பட்டுப்போக உத்திரவுகேட்டார். அப்பூசாரியோ அதற்கிணங்கவில்லை. ஒரு ராத்திரியாவது அங்குதங்கி காளிதேவி தர்சனம்செய்துபோகும்படி வற்புறுத்தினார், தன்னுடன்கூட துணையாகவந்தவர்கள் போய்விடுவார்களென்றும், தனக்குத் துணையில்லாமல் கஷ்டமாயிருக்குமென்றும், தான் அவச்யம் அன்றையதினமே புறப்பட்டு போகவேண்டுமென்றும், பரிசுகள் இல்லாவிட்டாலும் தான் போயே தீரவேண்டுமென்றும், யக்ஞசர்மா பிடிவாதம் செய்தார்,

பூசாரியாவிடப்போகிறவன்! இவர் பிடிவாதத்தைக்கண்டு பந்தோபஸ்தை அதிகமாக செய்துவிட்டான்’ எங்கு பார்த்தாலும்

ஆட்கள் தடியேந்தி நின்றூர்கள். தப்பித்துக்கொள்ள வழியில்லை யென்று சர்மா உணர்ந்தார். சிவப்பு புஷ்பங்களால் தொடுத்த மாலையொன்று தயார் செய்யப்பட்டு நம் யக்ஞசர்மா கழுத்தில் பலாத்காரமாக போடப்பட்டது. மங்களஸ்நாநம் செய்வித்து ஓர் சிவப்பு பட்டாடையை கட்டிக்கொள்ளும்படி அவரை வற்புறுத்தினர்கள். இந்த ஆரவாரங்களெல்லாம் எதற்க்காகவென சர்மா வினவ, தங்கள் குலதைவமான காளியை தர்சிப்பதற்கென பதிலுரைத்து, மறுதினம் அவர் யதேச்சையாய் ஊர்செல்லலாம் என சர்மாவிடம் உரைத்தனர்.

சர்மாவுக்குமட்டும் சந்தேஹம் ஏற்பட்டுவிட்டது. தன் ப்ராணனுக்கு அபாயம் வந்துவிட்டதென்றெண்ணி கலங்கினர். "ஐயோ! மணக் கோலத்துடன் கண்டு களிக்கவேண்டுமென எண்ணியிருக்கும்என்னன்னைக்குப்பிணக்கோலந்தான்நேரிடுமோ, அறியேனே! ஈசா! என்செய்வது? நீதான் சரணம்! என மனதில் ப்ரார்த்தித்து எல்லாபாரத்தையும் அப் பரம்பொருளான அச்சுதன் பேரில்போட்டு மேல்நடப்பதையும் கவனிப்போம் எனச் சும்மா இருந்தார்.

பால், பழம், பாயஸம், பக்ஷ்யம், முதலியன விசேஷமாக நம் சர்மாவின் முன் வைக்கப்பட்டது. ஒன்றுந் தோன்ருதிருந் தாலும் நடந்த ச்ரமத்தினுல் பசி மேலிட்டிருந்தது. எனவே தற்காலசாந்தியாக சாஸ்த்ரவிரோதமில்லாத சிலவற்றைமட்டும் உட்கொண்டார். ஆஹாரமானபிறகு இவரை காளிதேவியிடம் அழைத்துச்சென்றனர். அவர்களுடைய பாஷையில் தேவியின் எதிரில் ஏதோ சொன்னுர்கள். நம் சர்மா அதை "தேவி! நீ இந்த உத்தமபலியை ஏற்றுக்கொண்டு எங்களை அனுக்ரஹிப்பாய்" என சொல்லுவதுபோல் ஊஹித்தார்.

உள்ளம் நடுங்கியது. கால் தடுமாறியது, வாய் வார்த்தை ஒன்றும் சொல்லமுடியவில்லை. மனதில்மாத்திரம் அந்த தேவியை ப்ரார்த்தித்தார். "எனது தாயே! ஜகதம்பிகையே! என்னை ஈன்றெடுத்த தாய் என்னைக் காண ஆவலாயிருக்கிறுள். அவள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றியபிறகு உனக்கு ஆஹாரமாக யான் தயாராய் இருக்கிறேன். அப்புரம் உன் அனுக்ரஹம் எங்ஙனமோ!" என்று ப்ரார்த்தித்து கண்ணில் கண்ணீர்சொரிய த்யானம் செய்தவண்ணம் நின்றிருந்தார்.

ஏதோ சில மந்திரங்களை ஜபித்தபிறகு அந்தப் பூசாரி நம் சர்மாவை இழுத்துக்கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பினன். அப்பொழுது சூர்யன் மறைந்து சுமார் ஒரு நாழிகையிருக்கும். பிறகு புதியதோர் சிகப்புபுஷ்பமாலை அந்தணர் கழுத்தில் போடப் பட்டது. விதம் விதமான பக்ஷ்யபோஜ்யங்கள் அவர் முன் வைக்கப்பட்டன. ஒன்றும்உட்கொள்ளத்தோன்றுமற்றிகைத்தார் அவ்வேதியர். ப்ராணன் போகப்போகிறதென்ற தீர்மானத்துடன் இருக்கும் அவருக்குஎதுதான் வேண்டியிருக்கும்? அக் க்ரூரர்களா இதையெல்லாம் கவனிக்கப்போகிறார்கள்? ஒன்றையும் மதியாது அக் க்ரூரர்கள் நம் சர்மாவை உள்ளேதள்ளி தாளிட்டார்கள். முன் கொஞ்சம் சந்தேகமாயிருந்தது, இப்பொழுது நிச்சயமென நினைத்துவிட்டார்.

இந் நெருக்கடியான ஸமயத்தில் யார் உதவப்போகிறார்கள்? திடீரென ஓரெண்ணம் உதித்தது அவர் மனதில். அனேக அபாய நிலைகளில் பக்தர்களை காத்தருளிய ஸ்ரீமந்நாராயணபரமாத்மாவை நாம் ஏன் சரணமடையக்கூடாது? அவர் குருவாயிலாக கேள்வி யுற்றிருக்கும் விஷ்ணுஸஹஸ்ர நாமத்தின் ப்ரபாவம் அவர் ஞாபகத்திற்குவந்தது. ஏற்கனவே உபவாஸம் அதுவேபாராயா ணுங்கமாயிற்று. அந்த ஸஹஸ்ரநாமத்தை அதிவேகமாக ஏகாக்ர சித்தத்துடன் சுமார் ஆயிரம்முறை ஜபம் செய்தார்.

அதி பயங்கரமான இருட்டையும் தனியாய் தான் பூட்டப் பட்டு சிறைப்படுத்தப்பட்ட உள்ளையும் கொஞ்சமேனும் கவனி யாமல் சங்கசக்ர கதாபாணியாய்விளங்கும் அப் பரம்பொருளை மனதில் த்யானம்செய்து ஸஹஸ்ரநாம ஜபம் செய்தவண்ணம் இருந்தார்.

இவ்வுத்தமரை பலிகொடுப்பதற்காக தீட்டும் கத்தி முதலிய ஆயுதங்கள் சப்தமும், மற்ற சாமான்களுடைய சத்தமும் பூசாரி களுடைய ஆரவாரமும், நம் சர்மாவுக்கு த்யானம் கலையும் காலத்தில் இடையிடையே காதில்விழும். ஒன்றையும் கவனி யாமல் "ஹே தீனபந்தோ! பரமாத்மா! ஸர்வலோகசரண்யா! நீயே கதி! என மனதில் திடமாக நம்பி அதி தீவ்ரமாய் ஜபம் செய்துவந்தார்.

காலை சுமார் ஐந்துமணி. பக்தருக்கு அதீனமான விஷ்ணு பரமாத்மா அவர் ப்ரார்த்தனைக்கிணங்கி நான்கு கைகளிலும் சங்கம் சக்கரம் கதை முதலிய ஆயுதங்களையேந்தி மேக ச்யாம மூர்த்தியாய் அவரெதிரேதோன்றி "குழந்தாய்! உன்னுடைய தபஸ்ஸும் பக்தியும் கொண்டாடத்தக்கது! நான் சந்தோஷ மடைந்தேன். நீ பயப்படவேண்டாம். நான் ஒரு கார்யம் செய்யப்போகிறேன். அதற்கு கொஞ்சமேனும் நீ அஞ்சாதே! கடைசியில் எல்லாம் நன்மையாகமுடியும்" என்று உறுதிமொழி கூறி மறைந்தார்.

காலை ஆறுமணியாய்விட்டது. தினேசன் தன் ஸஹஸ்ர கிரஹங்களுடன் ப்ரகாசிக்கத் தொடங்கினன். பூசாரியும் அவன் சிஷ்யர்களும் மிக உத்ஸாஹத்துடன் பூட்டியிருந்த கதவைத்திறந்தார்கள். யக்ஞசர்மாவைப் பார்த்தார்கள். ஒன்றுந் தோன்ருமல் திடுக்கிட்டார்கள். என்னசெய்வதென்று தெரியாமல் திகைத்து நின்ருர்கள். ஏன்?

யக்ஞசர்மா தேஹம் முழுமையும் குஷ்டமும் கருமேகமும் பாய்ந்திருந்தது. புழுக்கள் துள்ளித்துள்ளிக் கீழே விழுந்தன. துர்நாற்றம் ஸஹிக்கமுடியவில்லை. இவையெல்லாம் விஷ்ணு மாயையின் கார்யம்.

இதைக்கண்ட அப்பூசாரி இது நம் தேவிக்கு பலியிட உபயோகப்படாதென நினைத்து அவரை அவருக்குக் கொடுத்தப் பரிசுகளுடன் ஓர் வண்டியில் ஏற்றி வெகுதூரத்தில் கொண்டு விட்டு விட்டார்கள். அவர்கள் விட்டு சென்றதும் நோயெல்லாம் மறைந்து, முன் காட்டிலும் அதிகமாக காந்தியுடன் அவர்தேஹம் ப்ரகாசித்தது. விஷ்ணுபக்தியின் மஹிமையை என்னவென்று சொல்லமுடியும்?

யக்ஞசர்மாவும், த்ரவ்ய ஆசையினுல் நேர்ந்த ஆபத்தை நன்கு உணர்ந்து, நோக தன் ஊர்போய் சேர்ந்து, தன்தாயை தர்சித்து மனமகிழ்ந்தார். தான் உயிருடனிருந்தவரையிலும் விஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணம் தினந்தோறும் செய்யத் தவறினதேயில்லை.

பக்தியினுல் எதையும் பெறலாம்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

ஸ்ரீஉத்திராதிமடத்து ஸ்வாமிகள் அவர்களுடைய ஸந்நிதானத்தில் மதருஸ் உத்ராதிமடத்தில் வேதாந்த விமர்சனீஸபையில் புத்தஜயந்தி தினத்தில் புத்தஜயந்தி மஹோத்ஸவத்தைக் கொண்டாடினதும் அன்று தர்க்கவித்துவான் பண்டிதசிரோமணி வீரசோழபுரம் கிருஷ்ணாசார்யார் அவர்களால் செய்யப்பட்ட உபன்யாஸச் சுருக்கத்தை அச்சடித்து ஊரூராய் இனாமாய் அனுப்பியதும், யாவருக்கும் தெரிந்திருக்கலாம். அந்த உபன்யாஸச் சுருக்கத்தில் ஸ்ரீவாஸுதேவன் ஏதமான துவிட். அதாவது 'தைவஸம்பத்துடன்கூடிய துவைத மதஸ்தர்களுக்கு உரியதான வைதிக சிரேயோமார்க்கத்தில் பிரவிருத்தித்துத் தாமும் விருத்தி அடைய விரும்பும் ஆஸுரஸம்பத்துடைய மனுஷ்யர்களை அவ்விதம் அடையவிடாது அவர்களை அதோகதியாகக் கெடுத்து விடுபவர்' என்னும் திவ்யநாமம் படைத்தவரென்றும், அவ்வித அற்புத நாமதேயத்திற்கேற்ப ஒருஸமயம் புத்தாவதாரம்செய்து ஆஸுர ஸம்பத்துள்ளவர்களை வைதிக மார்க்கமாகிய துவைத மதத்தைவிட்டு விலக்கி அவைதிகமாகிய விஜ்ஞானவாதம் சூன்ய என்னும் பௌத்தமதத்தை உபதேசித்துக் கெடுத்துவிட்டார் என்றும் பிறகு தைவஸம்பத்துள்ளவர்கள்கூட பௌத்தமதத்தில் நம்பிக்கையுடன் பிரவேசிக்க ஆரம்பிக்கும்பொழுது அவர்கள் அவ்விதம் சேர்ந்து கெடாமலிருக்கும்பொருட்டு பகவான் வியாஸ அவதாரம் எடுத்து பிரும்ம ஸூத்திரங்களை இயற்றி வேதப்ராமாண்யத்தை நிலைநாட்டி வைதிகமாகிய துவைத மதத்தைப் பிரதிஷ்டாபனம் செய்து பௌத்த மதத்தை நிராகரித்து தைவஸம்பத்துள்ளவர்களை நல்ல வழியில் திருப்பினாரென்றும் மறுபடியும் முன்போல் ஆஸுரஸம்பத்துள்ளவர்கள் தனது பௌத்த மதத்தை விட்டுவிட்டு வேதப்ரமாண்யத்தை ஒப்புக்கொண்டு நல்லவர்களான தைவஸம்பத்துள்ளவர்களோடு கலந்துகொண்டு வேத தாத்பர்ய விஷயமான துவைத மதத்தில் சேர்ந்து நல்ல கதியை அடைய ஏற்பாடுசெய்யும்பொழுது அதை ஸகிக்காமல் ஸ்ரீவாஸுதேவன் அவர்களைக் கெடுக்கும்படி ஸ்ரீமஹாதேவனை ஏவினாரென்றும், உடனே மஹாதேவன் ஸ்ரீசங்கராசார்யாளாக

அவதரித்து வாஸுதேவனுடைய ஆக்ஞையின்பிரகாரம் இச்சமயம் வேதத்தில் நம்பிக்கை அதிகமாகவைத்திருக்கும் அஸுர ஸம்பத்துள்ளவர்களுக்கு வேதத்தை நிராகரித்து பௌத்த மத உபதேசம் செய்யமுடியாது வேதத்திலேயே பௌத்தமதக் கொள்கைகளைப் புகுத்தி இவர்களைக் கெடுத்துவிடுவோமென்று கருதி விக்ஞானமேஆத்மா என்று விக்ஞானவாதக்கொள்கைகளையும் நிர்விசேஷ பிரும்மமே ஆத்மா என்று சூன்யவாதக்கொள்கைகளையும், ஸ்வல்ப்பவேறுபாடுகளுடன்கலந்து பிரச்சன்னபௌத்த மதமாகிய அத்வைதமதத்தைவேதார்த்தமாகக்கூறி அந்தமதத்தை அஸுரஸம்பத்துள்ளவர்களுக்கு உபதேசித்து அவர்களைதைவஸம்பத்துஉள்ளவர்களோடுகலக்காமல்பிரித்துவிட்டு அவ்வித அத்வைத மதத்தில் பௌத்தமத நிராகரணம்செய்யவும், வியாஜத்தால் பிரச்சன்ன பௌத்தமதமாகிய தனது அத்வைத மதத்தையே நிராகரித்துக்காட்டி தைவஸம்பத்துள்ள துவைத மதஸ்தர்களை இதில் முன்போல் பிரவேசிக்காமலிருக்கச்செய்து ரக்ஷித்து இவ்விதம் லோகோபகாரம் செய்தாரென்றும் இவ்விதம் புத்தாவதாரம். சங்காரவதாரம். இரண்டிலும் துவைதிகளுக்குச் செய்த உபகாரத்தைப் பாராட்டவேண்டியதென்றும், இன்னும் இதுபோன்ற அனேக விஷயங்களைத் தனது பெரும்புத்தியால் கண்டுபிடித்து ஸ்ரீகிருஷ்ணசார் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்' இவ்விதம் அற்புதமான தத்துவார்த்தங்களை லோகோபகாரார்த்மாய் வெளியிட்ட அவர்களுக்கு உபகாரம் செய்யவேண்டியது

कृते च प्रतिकर्तव्यमेष धर्मस्सनातनः ।

'உபகாரத்திற்குப் பிரத்தியுபகாரம் செய்யவேண்டியது ஸநாதன தர்மம்'' என்றும் சாஸ்திர வசனங்களால் ஆவச்யகமானதால் யக்ஷாநுரூபோபலி: என்கிற நியாயத்தால் நாமும் அவர்கள் அவச்யம் தெரிந்துகொள்ளவேண்டிய மத்வாவதாராத்புத லீலா ரஹகஸ்யங்களை அவர்களது ஆசார்யரான ஆனந்த தீர்த்தாசார்யாளாலேயே பிரேரிக்கப்பட்டு வெளியிடமுன் வருகிறோம். அதில் மத்வாவதாராத்புத லீலாரஹஸ்யங்கள் மத்வாச்சார்யாளுடைய அனுக்ரஹத்தாலேயே அறியவேண்டியிருப்பதால் அவர்களுக்கு முதலில் மூன்றுசுலோகங்களால் வந்தனத்தைச் செய்துகொண்டு பிறகு ரஹஸ்யார்த்தங்களை வெளியிட உத்தேசித்திருக்கிறோம், சுலோகங்கள்வருமாறு.

भुक्त्वा यो हि चतुस्सहस्रगणितान्याकण्ठभुक्तेः परं
रंभास्थूलफलानि तूर्णमथ च त्रिंशद्घटस्थं पयः ।
संपीय प्रकटीचकार भुवने स्वांभीमसेनात्मतां
सोऽयं वर्धयतूदरोत्थमनलं मध्वो विभुर्नस्सदा ॥

எவர் தான் ஆகண்டம் குறைவில்லாமல் புஜித்தபிறகு தனது மஹிமையை அறிய விரும்பிய சிலர்களால் கொடுக்கப்பட்ட நாலாயிரம் மொந்தம் பழங்களையும் க்ஷணநேரத்தில் புஜித்துவிட்டு உடனே முப்பது பெருங் குடங்களிலுள்ள பாலையும் அலக்ஷ்ய மாகப் பானம் செய்து ஏப்பம்விட்டு, ஏகசக்ரமென்னும் நகரத்தில் பகாஸுரனுக்காக அவ்வூர் ஜனங்கள் அனுப்பிய ஒரு பெரும் வண்டியிலுள்ள அன்னம் வியஞ்சனம் முதலியதைப் புஜித்தும் பசி தீராத பீமஸேனனுடைய அவதாரம் தான் என்றும் தனது அவதார தத்துவத்தை உலகத்திற்கு விளக்கினரோ; அப்பேர்ப் பட்ட பிரபுவாகிய மத்வாசார்யார்நமது ஜாடராக்னியை அஜீர்ணம் முதலிய தோஷங்களைவிலக்கி விருத்தியடையச் செய்யட்டும், பிரார்த்திக்கவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்க இதைப் பிரார்த்திப்பதற்குக் காரணம் என்னவெனில் ஸூர்யனிடத்தில் ஆரோக்யத்தையும் அக்னியினிடத்தில் ஐசுவர்யத்தையும் பரமே சுவானிடத்தில் ஜ்ஞானத்தையும் ஜனர்த்தனனிடத்தில் மோக்ஷத் தையும் வரிக்கவேண்டுமென்பதாக அவ்வவர்களின் யோக்யதானு ஸாரமாகப் பிரித்துக்கூறியிருப்பதுபோல் மத்வாசார்யாளிடத்தி லும் அவரது மகிமைக்குத் தக்கவாறு ஜாடராக்னி தீபனத்தை வரிப்பதே பொருத்தமென்று கண்டு இவ்விதம் பிரார்த்தித்தது.

अद्वैतात्मपरत्वसौरभलसद्वेदान्तसूत्रस्रजं
स्वीकृत्य स्वकधीकरेण बहुधा च्छित्वा च पिष्ट्वा भृशम् ।
द्वैतासौरभमाकलय्य कपिराड्रूपं समाचष्टयः
स्पष्टं स्वं स मनः कपिं नयतु मे मध्वः पदं शोभनम् ॥

எவர் இயற்கையில் அத்விதீயமான ஆத்மஸ்வரூபத்தைப் பிரதி பாதிப்பதில் தாத்பர்யமாகிய பரிமளத்தோடுகூடி விளங்கும் வேதாந்த வாக்யங்களாகிய உயர்ந்த புஷ்பங்களைக்கோர்த்துக் கட்டப்பட்ட பிரும்மஸூத்திரமாகிய புஷ்பமாலையைத் தனது

அதிஸூக்ஷ்மபுத்தியாகிய காத்தால் கிரஹித்து அதன்பரிமளத்தை அனுபவித்து ஆனந்திக்காமல் அதை பலவிதமாகப்பிச்சும் நன்கு பிசைந்தும் (அதாவது சாங்காபாஷ்யம், ஸ்ரீகண்டபாஷ்யம், ராமானுஜபாஷ்யம் முதலியதுகளில் சிற்சில விடங்களில் ஸகுணம் நிர்குணம், பேதம் அபேதம் முதலிய விஷயங்களை ஸூத்ரங்களுக்கு அர்த்தமாகக்கூறி ஒன்றுக்கொன்று பிரகாரபேதமுடையதாய் இருந்தாலும் மற்றவிடங்களில் பெரும்பாலும் பூர்வபக்ஷம் ஸித்தாந்தம் இவைகளை ரசனம்செய்யும்மாதிரி வேறுபட்டாலும் கருத்தில் பேதமில்லாமல் எவ்விதம் ஒத்திருக்கின்றனவோ அவ்விதம் மத்வபாஷ்யத்திலில்லாமல் அநேகமாக பிரும்மஸூத்திரம் பூராவும் இதராள் ஒருவரும் சொல்லாததும் தனது அதிஸூக்ஷ்மபுத்திக்கு மாத்திரம் புலப்பட்டதும் தன்னுடைய அர்த்தத்தை இதாளிடம் சொன்னால் ஸூத்திரத்துக்கு இப்படியும் அர்த்தம் சொல்லுவாருண்டோ இது ஸம்பந்தமில்லாமலிருக்கே என்னும் அஸம்பாவனுபுத்தியோடு கூடிய அவர்களுடைய மனதிலேயே பிரவேசிக்காததுமான அர்த்த தத்துவங்களைக் கல்பித்தும் அதற்கனுகுணமாக ஸூத்திரங்களையும் அதிகாணங்களையும் மாத்தியும்) துவைத தாத்பர்யமாகிய துர்கந்தத்தை அதற்கு ஏத்தி அந்தபுஷ்பமாலையை அஸாரமாகச்செய்து தான் கபிஸார்வபௌமனுடைய அவதாரமென்பதை ஸ்பஷ்டமாக உலகத்திற்குவிளக்கினரோ அவர் தனது இனத்தைச்சேர்ந்த எனது மனதாகிய குரங்கை இது நம்முடைய இனத்தைச்சேர்ந்தது என்னும் அபிமானம்பாராட்டி நல்ல பதவியை அடையும்படிசெய்யட்டும். (அதாவது பகவத் சரணமாகிய நல்ல ஸ்தானத்தை அடையச்செய்யப்பட்டும்.)

ऋज्वीर्वेदभवाश्शिखा विदलयन् गत्या तिरश्चीनया
सत्पुष्पाणि निपातयन्नपि ततस्वैरं रटन् सर्वतः ।
यो वायोरवतारतां स्वयमिह स्पष्टीचकार क्षितौ
पूर्णप्रज्ञपदाभिधस्स भवतात् सन्मार्गगामी परम् ॥

எவர் வேதமாகிய கல்பவிருக்ஷத்தின்ருஜுவாயுள்ளசாகைகளாகிய கிளைகளைத்தனது திர்யக்கதியால் (குறுக்கு நடையால்) முறித்து (அதாவது वसन्तेवसन्तेज्योतिषायजेत என்பதுமுதலியகர்மகாண்ட ஜ்ஞானகாண்ட வாக்யங்களிலுள்ள பதங்களை ஏகாக்ஷரநிகண்டு முதலிய அபூர்வகோசங்களை வைத்துக்கொண்டு ஒடித்து அர்த்தாபாஸங்களைக்கல்ப்பித்து) அதில் இயற்கையாய் விளங்கும் நல்ல அர்த்தங்களாகிய புஷ்பங்களை அதிலிருந்து உதிர்த்துவிட்டு இவ்விதம் தனக்குத் தங்குதடங்கலில்லாமல் இதர மதஸ்தர்கள் சொல்லும் நல்ல அர்த்தங்களைக் காதில்போட்டுக்கொள்ளாமலே தனது துரர்த்தங்களை எந்த சுருதிக்கும் கல்ப்பித்துக்கொண்டு இவ்வித

மெங்கும் பெரும் சப்தம்போட்டுக்கொண்டு தான் திர்யக்கதியோடு கூடிய வாயுவின் அவதாரமென்னும் தனது அவதாரரஹஸ்யத்தை இப்புவியில் விளக்கியிருக்கின்றாரோ அப்பேர்பட்ட மஹிமை வாய்ந்த பூர்ணப்ரஜ்ஞர் என்னும் விபரீதார்த்த லக்ஷகமான அற்புத நாமதேயங்கொண்ட மஹான் சுருதியாகிய நல்ல மரம் முதலிய வஸ்துவை முறிக்கும் ஸ்வபாவம்வாய்ந்த பெருங்காற்று ரூபத்தை விட்டுவிட்டு இன்னொரு ஜன்மமெடுத்தாவது தென்னல் காத்துபோலொத்த வைதிகர்களாகிய ஸாதுக்களுக்கு திருப்திகரமானரூபத்தை எடுத்துவேதங்களுக்கு நல்ல அர்த்தங்களை போதிப்பதாகிய நல்ல மார்க்கத்தில் போகட்டும்.

இவ்விதம் மூன்று சுலோகங்களால் ஆனந்த தீர்த்தாசார்யாளுக்கு வந்தனம் செய்தவுடன் அவர்களது அவதாராற்புத லீலா ரஹஸ்யங்கள் எனது மனதில் ஸ்புரித்துவிட்டன. அவைகளை அடுத்த ஸஞ்சிகையில் லோகோபகாரார்த்தம் வெளியிடுவோம்.

சுபம் போலகம் ஸ்ரீ. ஸ்ரீராமசாஸ்திரிகள்

புஸ்தகசாலைப்பயன்.

தத்காலம் நம் நாட்டின் கல்விநிலை மிகவும் வருந்தத்தக்கதாய் இருக்கின்றது. முற்காலத்திலோ நம் தேசத்தில்தான் எல்லா கலைகளும் உண்டாயின. அக்கலைகளிலெல்லாம் வல்லுநர்களே நம் நாட்டில் நிரம்பியிருந்தனர். அதைத்தான் பாரதியாரவர்கள்

"வேதம் நிறைந்த தமிழ்நாடு" என்றும்,

கல்வி சிறந்த தமிழ்நாடு - உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு
பல்விதமான சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ்நாடு,

என்றும் கூறியுள்ளார்.

அக்காலத்தில் ஒரு கம்பன் பிறந்த தமிழ்நாடானது இக்காலத்தில் அநேகம் வம்பர் பிறக்கும் தமிழ்நாடாக மாறியது வியக்கத்தக்கதே. இப்பொழுது நமக்கேற்பட்டிருக்கும் இந்நிலையை மாற்றவும், முன்னோர்களது கல்வியையறிந்து அவைகளை நிலைநாட்டவும். புத்தக்சாலைகளின் அமைப்பு இன்றியமையாததாகும்.

இன்னும் இப்பொழுது மேனாட்டார்கள் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறப்படும் 'ஆகாயயானம்' முதலியனவையெல்லாம் நமது முன்னோர்கள் நான்முகம் அறிவிக்காவிடில் இவர்களால் கண்டுபிடிக்கமுடியுமா? நாம்தான் இவர்கள் கண்டுபிடித்ததாகக்

கூறுவோமா? அல்லது நாமாகவே அந்நூல்களை ஆராய்ச்சிசெய்து அவர்களைப்போல் புதியவைகளாகத் தோன்றும் பொருள்களை சிருஷ்டிக்காமல் திண்ணை தூங்கிகளாக வளர்வோமா? இத்துணைக் காரியங்களுக்கும் யாது காரணம் எனில் அவர்கள் தேசத்தில் 'புத்தகசாலை'யிருப்பதும் நமது தேசத்தில் இன்மையும்தான்.

அன்றியும், புத்தகசாலைகள் இருந்தால்மட்டும் போதாது. அதிற்சென்று வாசித்தல் வேண்டும். அன்னியநாடுகளில் இதற்காகப் பாடுபடுபவர் ஒவ்வொரு கிராமங்களிலும் அநேகர் உளர். அவர்கள் தங்களது நித்யக்கடன்களில் ஒன்றாக புத்தகசாலைக் கல்வியை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் புத்தகசாலைக்காகப் புத்தகம் சேகரிப்பதைவிட சேகரித்தவைகளை வாசிக்க ஆட்கள் தேடுவதிலேயே அதிகமாக உழைக்கின்றார்கள்.

ஆக்ஸ்போர்ட் முதலிய எல்லாப் பிரதேசங்களிலும் ஒவ்வொரு ஊரிலும் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு புத்தகசாலைகளாவது கட்டாயம் இருக்கும். இவை அரசாங்கத்தாரின் நன்கொடையால் நடைபெறுவனவாகும். இப்படிப்பட்ட வாசகசாலைகளில் ஊரிலுள்ளோர்களை வருந்தியழைத்து வாசிக்கும்படி கூறுவார்கள். அவைகளில் ஒருமுறை கூறுவாம்.

ஒவ்வொரு புத்தகசாலையின் பக்கத்திலும் ஒவ்வொரு சொற்பொழிவு நிலையமுண்டு. அவைகளில் ஒரு புகழ்வாய்ந்த சொற்பொழிவாளரைத் தங்கட்கல்வியகத்தின் சார்பாக அவர்களைப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தங்கள் சாலையில் இன்ன பெயரிய புத்தகத்தை ஒருவருமே வாசிப்பதில்லை; அதைத்தாங்கள் சொற்பொழிவில் சேர்த்துக் கூறவேண்டுமெனக்கூறி பேசச் சொல்லுவார்கள், அப்படி அவரது சொற்பொழிவைக்கேட்டு அப்புத்தகசாலையை ஆதரிப்பவர் சிலர்.

இன்னும் புகழ்பெற்ற அறிஞனது சொற்பொழிவைக்கேட்க பலரும் வருவார்கள். அவர்கள் வந்துசேர்ந்து சொற்பொழிவை ஆரம்பித்ததும் ஆங்குள்ள ஸமஸ்தமான கதவுகளையும் மூடிவிடுவார்கள். அப்பொழுது அவையோர் வெப்பம் மேலிட்டுகாற்றை வேண்டுவார்கள். அப்படி வேண்டும்பொழுது புத்தகசாலைச் செயலாளர்கள் பலவிதமாக சித்தரித்துள்ளதும், தங்களது நன்மைக்காகவே ஏற்பட்டது. இதைத்தாங்கள் ஆதரிக்கவேண்டும். என்றிம்மாதிரி எழுதியதுமான விசிறிகளை யாவருக்கும் வழங்குவார்கள். அச்சித்திரங்களையும் அதில் எழுதியுள்ள எழுத்துக்களையும் கண்டுமோகித்து அதை ஆதரிப்பார் சிலர்.

இன்னும் சிலர் ஆடம்பரமான விளம்பரங்களாலும் சினிமா முதலிய நிழலாட்டங்களாலும் அதை ஆதரிக்கின்றனர். இப்ப

டியே ஜனங்களுக்கு உத்ஸாகமூட்டி அவர்களை வாசிக்கும்படியா கச் செய்கின்றனர். இஃதுடனல்லாமல் அன்னாட்டில் மாணவர் களுக்கான புத்தகசாலைகளும் உண்டு.

ஒவ்வொரு புத்தகத்தையும் அட்டையைப்புரட்டினால் உள்ளே ஓர் அழகிய படமும் அதன் அடியில் அப்புத்தகசாலையின் பெய ரும் அதில் சேர்ந்து வாசிக்கும்படி எழுதியிருக்கும் மனதைக் கவரும் வாக்கியங்களையும் இப்பொழுதும் காணலாம்,

நமது நாடோ புத்தகசாலையென்றால் என்னபொருள் என் பதுகூடதெரியாதவர்களாலேயே நிறம்பியிருக்கின்றது ஆகலான் கீழ்க்கூறியபடி புத்தகசாலைகள் நம்நாட்டில் குறைவது ஊருக் கொன்றிருந்தால் முட்டாள் என்பது மருந்திற்கு அகப்படுமோ.

அயல்நாட்டிலிருந்து நடையுடைபாவனைகளைக் கையாளும் கனவான்கள் அவர்களிடமிருந்து இம்முறையைக் கையாண்டால் நம்நாட்டில் நலம் மிகும். ஏ. ஆர். மலையப்பன்

ஆங்கரை.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

ம்ருதுபாஷி அஸ்தீகர்.

1. ஜாத்காரு என்று ஒரு ரிஷி இருந்தார். அவர் அல்லும் பகலும் ஓயாது தவம் செய்வார். அவருக்கு வாயுவே ஆஹாரம். எங்கு வேண்டுமானாலும் போக அவருக்கு சக்திஉண்டு. அவருக் குப் பெண்டு பிள்ளைகளிடத்திலே ஆசை இல்லை. ஆகையால் அவர் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. யத்ருச்சையாக ஒரு பள்ளத்திலே தலைகீழாகத் தொங்கும் பித்ருக்களைப்பார்த்தார். நீங்கள் யார்? ஏன் தொங்குகிறீர்கள் என்று கேட்டார்.

2. நாங்கள் யாயாவரர் என்ற பித்ருக்கள். எங்கள் வம்சம் விருத்தியாகவில்லை. ஜாத்காரு என்ற ஒருவன் எங்கள் குலத் திலே இருக்கிறான். அவனும் சாஸ்த்ரப்படி கல்யாணம் செய்து கொண்டு ஸந்ததியை உண்டுபண்ணவில்லை என்றார்கள். ஆஹா! நான்தான் ஜாத்காரு. எனக்கு வயிற்றிற்கும் ஆஹாரம்வேண் டாம். இந்திரியங்களுக்கும் வேண்டாம் ஆகையால் விவாஹம் செய்துக்கொள்ளவில்லை. ஆனாலும் பித்ருக்களது க்ஷேமத்திற் காக விவாஹம் செய்துக்கொள்கிறேன்.

3. எனக்கு பத்நியாக வருபவளுக்கும் என்பெயரே இருக்க வேண்டும். பிக்ஷை எடுப்பதுபோல் மூன்றுமுறை கேட்பேன்.

அப்படிப் பெண் வந்தால் கல்யாணம் செய்துகொள்கிறேன் என்றார். தனக்குப் பிடிக்காவிட்டாலும் பித்ருக்களுக்கு உதவி செய்வது தர்மம் என நினைத்தார். நடுக்காட்டில் வந்து யாராவது எனக்குப் பெண்கொடுப்பார்களா? என்று கத்தினர். வாஸுகி என்ற பாம்பு தன் தங்கையை அழைத்துவந்து இதோ கொடுக்கிறேன் என்றான். பெண் பெயரென்ன? என்று கேட்டார். ஜாத்காரு என்றான் வாஸுகி. ஓஹோ? பகவத் ஸங்கல்பமா இது! என்று எண்ணி விதிப்படி மணந்தார்.

4. ஆனாலும், எனக்கு ஸம்ஸாரத்தில் ஆசை இல்லை. சின்ன தப்பு செய்தாலும் உன்னை விட்டு விட்டு ஓடிவிடுவேன் என்றார் ரிஷி. பதிவ்ருதை குற்றம் செய்வாளா? ஒருநாள் வேண்டுமென்றே ரிஷி, மனைவி மடியில் தலைவைத்து படுத்தார் கொரட்டை விட்டுத் தூங்கினர். பொழுது போய்விட்டது. ஸந்த்யா காலம் வந்துவிட்டது. அவரை எழுப்பினால் தூங்குகிறவரை எழுப்பிய பாபம்வரும். எழுப்பாவிட்டால் ஸந்த்யாகாலம் வந்துவிட்டதே ஏன் எழுப்பவில்லை என்று கோபிப்பார். எழுப்பி விடுவதே நல்லது, ஏன்? காலத்தில் அநுஷ்டானம் நடக்கும். தர்மம் தவாறது. என்று நினைத்தாள் எழுப்பிவிட்டாள்.

5. அவள் நினைத்தபடியே ஆய்விட்டது. ரிஷிக்கு கண் சிவந்தது. கோபம் வந்தது. முன்னேயே சொன்னேனே? நான் தூங்கும்போது ஸூர்யன் அஸ்தமனம் ஆய்விடுவானா? என்னை அவமானப்படுத்திவிட்டாய், இதோ போகிறேன் போ! என்று கிளம்பிவிட்டார் ரிஷி. ஸ்வாமி! பொருத்துக்கொள்ளும். உங்கள் பித்ருக்கள் இஷ்டம் பூர்த்தி ஆகவில்லையே ? நான் கல்யாணம் செய்துகொண்டதற்கு தான் பயன் என்ன? என்றாள் அவள் இருக்கு போ என்று போய்விட்டார். ஸ்திரீ தனியாகஇருக்கலாமா? உடன் பிறந்தான் வீட்டிற்கு வந்தாள். நடந்ததைச் சொன்னாள் அண்ணாவிடம்.

6. ஜாத்காருவின் அநுக்ரஹத்தால் ஒரு அழகானகுழந்தை பிறந்தது. ரிஷி அஸ்தி-இருக்கு என்று சொல்லிப்போனதால் அஸ்தீகர் என்றே பெயரிட்டார் குழந்தைக்குமாமா. அம்மான் வீட்டில் அருமையாக வளர்ந்தார் அஸ்தீகர். விளையும்பயிர் முளையிலே குழந்தையைப் பார்த்தவுடனே இது நன்றாகப்படிக்கும். எல்லோரிடமும்இனிமையாகப்பேசும். நல்லபெயரெடுக்குமென்று

எல்லோரும் வாழ்த்தினார்கள். உபநயநமும்ஆச்சு. குருகுலம் சென்றான். குழந்தை ச்யவநரின் புத்ரரை குருவாகக்கொண்டான்.

7. ஸகலவித்தைகளையும் சீக்கிரமாக கற்றுக்கொண்டான். ஒருநாள்கூட குருசுச்ரூஷை தவரமாட்டான். ஒருவரை கடிந்து பேசமாட்டான். ஒருவரிடமும் சீ என்றவார்த்தைக் கேட்கமாட்டான் ஏன்? இவன் ஒருவரைச் சொன்னாலல்லவா இன்னொருவன் இவனைச்சொல்வான். வீண்சண்டைக்குப் போகமாட்டான், இவன் அடக்கத்தைக்கண்டு எல்லோரும் மெச்சினர். படிப்பும் குணமும் அனுஷ்டானமும் இவருக்கு இருந்தபடியால் இவர் பெயர் எங்கும் பிரஸித்தமானது. இவரைக் கண்டவரெல்லாம் பூஜிப்பர்.

8. ஜநமேஜயரது ஸர்ப்பயாகத்தில் தன் இனத்தவர் அழிவதைக்கண்ட வாஸுகி அஸ்தீகரைத் தூண்டினான். பரோபகாரத்திற்காகவே இந்த உடல் என்று நினைத்தார் அஸ்தீகர். உடனே வேகமாக அரசன் யாகத்திற்கு வந்தார். அவரோ ப்ரஸித்தமானவர். கல்வியில் கரைகண்டவர். குணத்திற்கோ இருப்பிடமானவர். இவரைக்கண்டவுடன் எல்லோரும் எழுந்து நின்றனர். ஏன்? குணத்திற்கும் யோக்யதைக்கும் மரியாதையே தவிர குணமுள்ளவன் சிறியவனா பெரியவனா? என்று பார்க்கலாமோ? ஆஸநம் கொடுத்தான் அரசன். அர்க்யம் பாத்யம் ஆசமநீயம் முதலியவைகளைக் கொடுத்து பூஜித்தான்.

9. இவரைப்பார்த்தவுடன் எல்லாவற்றையும் கொடுத்துவிடலாம் என்று அரசனுக்குத் தோன்றிற்று. அவரது மதுரமான வார்த்தைகளைக்கேட்டான். பாவசமானான் ஜநமேஜயன். வேண்டியதைக்கேளுமென்றான். ஸர்ப்பயாகத்தை இத்துடன் நிறுத்தும் என்றார் அவர். அப்படியே நிறுத்தி விட்டான் ஸர்ப்பங்களுக்கு அபயமுண்டானது நாம் ஸந்த்யாவந்தன உபஸ்தானத்திற்குப்பிறகு இந்த சரிதத்தை ச்லோகரூபமாகச் சொல்கிறோம். பாம்புகளுக்கு அபயமளித்த அஸ்திகரது சரிதம் நமக்கு உண்டாகும் பாம்பு பயத்தை நீக்கும். ம்ருதுவாகவும் மதுரமாகவும் பேசினதன் பயனைப்பார்த்தீர்களா? க்ரூரமாகப்பேசும் கழுதை நமக்கு என்னதீமைசெய்தது? மதுரமாகக் கூவும் குயில் என்ன உதவிசெய்கிறது? குயிலைக்கொண்டாடுகிறோம்.

ஸ்ரீவத்ஸ வெ ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

நாகையின் பாக்யம். 3,4,5, இம்மூன்று தினங்களிலும் ஹிந்து மதாபிமான சங்கத்தின் ஆதரவில் அத்வைத உபன்யாஸங்கள் நடந்தன. விஷயம் மாத்ரம் அத்வைதமல்ல. உபன்யாஸமும் (அதற்கு ஈடுவேறில்லாததால்) அத்வைதமே. உபன்யாஸகர் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீபாதாளது பூர்ண கடாக்ஷத்ரத்திற்குப் பாத்ர மானவர். கடினமான விஷயங்களை எளிய நடையில் எல்லோரும் நன்கு உணரும்படி அருமையாக உபன்யஸிப்பவர் கேட்கக் கேட்கத் தெவிட்டாமல் பேசும்பெரும்பாக்யம்பெற்றவர். வேதாந் தமோ, ஸ்மிருதியோ, வைத்யமோ, ஜ்யோதிஷமோ கேட்டவிடத் தில் தூக்கத்திலும் தங்கு தடையின்றி ஸந்தேஹமறச் சொல்லும் யோக்யதைபெற்றவர், எல்லோரும்போற்றும் குணமுடையார். ஸுக்ருஹீத நாமதேயர். வாசகர்களே ஸ்மிருதி பூஷணம் பர்ஷ யபாவக்ஞர் யார் என அறிவர்.

பீடமஹிமையோ? 7உ கும்பகோணத்தில் ப்ராஹ்மணஸபை யார்கூடி குருவாயூர் ஆலயத்தை காங்க்ரஸ்காரர் கெடுப்பதைக் கண்டித்தனர். இதுமாத்ரமல்ல. அவ்வப்போது அவச்யமான கார்யத்தைப் பிறர் தூண்டுதலில்லாமலே ஷி ஸபை செய்துவரு கிறது. ஸ்ரீ காமகோடிபீடம் ஆங்கு அமைந்துளது. அதன் மஹிமைதான் இதற்கு காரணமோ என நினைக்கவேண்டி யிருக்கிறது.

சென்னையிலும். 8உ சென்னையில் தம்புசெட்டி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீசங்கரகுரு ஸ்ரீமடத்தில் மத்ரப்ராந்த்ய ப்ராஹ் மணஸபை அமரகலாவிலாஸினீஸபை வைதிகஸேவகஸபை ஸ்ரீ சங் காமடம் புராணப்ரவசனஸபை ஆகிய இவைகளின் ஆதரவில் ஓர் ஸபை கூடிற்று. ஆலயாஹஸ்யம். தீண்டாமைக்காரணம், காங்க் ரஸின் அறியாமை பக்தர்களின் பெருமை முதலிய பல விஷயங் கள் உபன்யஸிக்கப்பட்டு கண்டன தீர்மானம்செய்து காங்க்ரஸிற் கனுப்பப்பட்டது.

லக்ஷார்ச்சனை. 10உ முதல் சென்னை கந்தஸ்வாமிகோவி லிலும், முத்யால்பேட்டை ஸ்ரீ கந்தபகவானுக்கு யதோக்தமாக லக்ஷார்ச்சனை நடைபெற்றது. எண்ணிறந்த பக்தர்கள்வந்து தர் சித்ததுடன் தங்களாலான பொருளுதவியும் செய்தனர், ஸுப்

ரஹ்மண்ய ஸ்வாமி கலியில் ப்ரத்யக்ஷசக்தியுடன் பக்தர்கள் கோரியபலனை அளித்து அனுக்ரஹம் புரிவது ப்ரஸித்தம். கீழ்க் கண்டவிடங்களிலும் பக்தி ச்ரத்தையுடன் ஷை வைபவம் நன்கு நடந்தது. கோடம்பாக்கம் ஆலயம். மேலமாம்பலம் ப்ராஹ்மண ஸபை,

வழிகாட்டுகிறார், கொஞ்சம் மதாபிமானியாக உள்ளோர் நம்மூரில் மதப்ரசாரம் போதவில்லை. ஸ்ரீமடாதிபதிகள் தக்கதைச் செய்யக்கூடாதா? பல்லாயிரம் மைலைத்தாண்டிவந்து பாதிரிகள் என்ன ப்ரசாரம் செய்கின்றனர்! என்றுவருந்துவர்- ஆனால் ஆங் கிருந்து "மிஷின்" என்ற கூட்டத்தார் இவர்களுக்கு வேண்டிய மட்டும் பணம் அனுப்புவதையும் மதாபிமானிகள் மிஷினுக்கு மாதாமாதம் சம்பளத்தில் ஓர் பகுதி தருவதோடு ஆயிரக்கணக் கான பவுனைத்தருவதையும் கவனிப்பதில்லை. பழமானேரி ஸ்ரீமான் ஐயு அய்யர் என்ற தர்மசீலன் ஐம்பது ஆயிரம் ரூபாயும் வீடுமாக ஓர் அத்வைத பாடசாலைநடத்தவும் ப்ரசாரம்செய்யவும் ரிஜஸ்டர் செய்துகொடுத்திருக்கிறார். மதாபிமானிகளது உள்ளக்கோயிலி லிருந்து பகவான் இவருக்கு பூர்ண ஆசீர்வாதம் செய்வாரென் பது திண்ணம். மற்ற மதாபிமானிகள் இதைக் கவனிக்கட்டும்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.—இச்சபை கல்கத்தாவில் மார்கழிமாத விராமத்தில் ஓர் பெரும்மஹாஸபையைக் கூட்டப் போகிறது. 16-ஆயிரம் ரூபாய் வசூலாயிருக்கிறது. ப்ரசாரத் திற்கு ஒருவர் இலவசமாக மோட்டாரை ஷை ஸபைக்கு கொடுத் தார். பந்தல் செலவுக்கு ஒருவர் 3 ஆயிரமளித்தார். நம்நாட்டு மதாபிமானிகளும் சேர்ந்து இஸதைப் பலப்படுத்தினால் தர்மம்தழைக் கும்—ஆங்குள்ள மதாபிமானத்தைக் கவனியுங்கள்.

ஸப்தாஹம். சென்னை மைலையில் ஸ்ரீ தேசிக ஆலயத்தில் ஸ்ரீ பாகவத ஸப்தாஹத்தை விதிப்படி நடத்தபலத்த ஏற்பாடு நடக்கிறது. காலையில் வேதபாராயணமும் அர்ச்சனாதிகளும் விசேஷமாக நடக்கும், லோகக்ஷேமத்திற்காகவும் பக்திபாவவும் பலகனவான்கள் கூடி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கின்றனர். பாகவதத்தால் பக்தியும் வைராக்யமும் உண்டாம் என்பது சான் றோர்மொழி, 18உ ஆரம்பமாம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா,